# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : CMP No.175/2024**

**MC 8/2018**

**Prosecution witness : ம.சா.1** **Date : 23.09.2025.**

| Name : தாரணி தேவி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) H.M.O.P.No.10/2008 என்ற எண்ணில் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரிய வழக்கில் நானாகவே விவாகரத்து பெற்றேன் என்றால் ஆமாம். நான் தன்னிச்சையாக விவாகரத்து வழக்கில் தீர்ப்பு பெற்றேன் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் வழக்கறிஞராக பணி செய்து மாதம் ரூ.50,000/–க்கு மேல் சம்பாதித்து வருவதாக எனது ஜீவனாம்சம் கோரிய மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் ரூ.1,00,000/–க்கு மேல் சம்பாதிப்பதாக சொல்லியுள்ளேன். வழக்கறிஞர் தொழில் மூலமாக மேற்சொன்ன வருமானம் குறித்து எப்போது சொன்னார் என்றால் திருமணம் ஆன போது சொன்னார். இந்த விவரத்தை ஜீவனாம்ச வழக்கில் சொல்லவில்லை என்றால் தற்போது நினைவில்லை.

2) வருமானம் குறித்து ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தீர்ப்புக்கு பிறகு செலவு அதிகமாக இருப்பது குறித்து ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பள்ளி சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். மனுவை எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் கடந்த ஆண்டு தாக்கல் செய்தேன். பள்ளி சான்று எந்த தேதியில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜீலை மாதத்திற்கான சான்றை தாக்கல் செய்துள்ளேன்.

3) மனு தாக்கலுக்கு பின்னிட்டு பெறப்பட்ட ரசீதை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருட வருடம் பள்ளி கட்டணம் கட்டி அதன் ரசீது என் வசம் உள்ளது. முதன்மை வழக்கில் நான் தமிழக காவல் துறையில் கைரேகை பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த பணியின் போது நான் மாதம் ரூ.50,000/- வருமானம் பெற்றதாக குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

4) எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது வீடு கட்டி வாடகைக்கு விட்டு அதன் மூலமாக வருமானம் பெறுகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் அது என்னுடையது அல்ல என் தாயார் உடையது. என் குறுக்கு விசாரணையின் போது எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது வீடு கட்டி வாடகைக்கு விட்டு அதன் மூலமாக வருமானம் பெறுகிறேன் என சொல்லிவிட்டு தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வீடு வாடகை மூலமாக எனக்கு ரூ.25,000/-க்கு மேல் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல.

5) எனக்கு வருடம் வருடம் ஆண்டு மிகை ஊதியம் (Increment) வருகிறது என்றால் ஆமாம். தற்போது சம்பளம் ரூ.60,000/- பெறுகிறேன். ரூ.60,000/- பெறுவது குறித்து சம்பள ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேவையில்லை. நான் ரூ.60,000/- பெறுவதாக சொல்வது பொய் என்றும் தற்போது நான் மாத சம்பளம் ரூ.80,000/- பெறுகிறேன் என்றால் சரியல்ல.

6) எனக்கு நிலையான வருமானம் வருகிறது என்றும் அதற்கு நான் வருமான வரி தாக்கல் செய்கிறேன் என்றால் ஆமாம். நிலையான வருமானம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்றும் நான் வேண்டுமென்றே மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. முதன்மை வழக்கில் குறுக்கு விசாரணையில் என் சம்பள தொகையின் ஒரு பகுதியை என் குழந்தைக்கு செலவு செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை.

7) நானும் சரிபாதி செலவு செய்ய ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. நான் அரசாங்க வேலை செய்வதால் நான் என் குழந்தைக்கு செலவு செய்ய கடமைப்பட்டவர் என்றால் நான் அன்றாட தேவைகள் மற்றும் காய்கறி

வாங்கும் செலவு செய்து வருகிறேன். நான் மேற்சொன்ன விவரத்தை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

8) என் முதல் விசாரணையில் நான் என் குழந்தைக்கு அன்றாட தேவைகளை பார்த்து வருவதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 02.06.2025 ம் தேதிய பள்ளியில் பெறப்பட்ட ரசீதை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் ரசீது பெறும் முன்பே மனு தாக்கல் செய்துவிட்டேன் என்றால் ஆமாம். பின்னிட்டு தாக்கல் செய்த ரசீது இந்த மனுவிற்கு ஏற்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.

9) நான் எங்கு பணிபுரிகிறேன் என்றால் ஈரோடு காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பணிபுரிகின்றேன். என் தாயார் பராமரிப்பில் தான் குழந்தை மனுதாக்கல் செய்தது முதல் தற்போது வரை வாழ்ந்து வருகிறது என்றால் ஆமாம். என் தாயார் பராமரிப்பில் தான் இன்று வரை இருந்து வருகிறது என்ற நிலையில் என் தாயாரை நான் தான் பராமரித்து வருகிறேன். என் தாயாருக்கு தனியாக பென்ஷன் வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது.

10) எவ்வளவு பென்ஷன் பெறுகிறார் என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் என்னிடம் விவாகரத்து பெற்று சட்டப்படி வேறு ஒரு திருமணம் செய்து கொண்டு குழந்தை பெற்றுக் கொண்டு அவர்களையும் பாரமரித்து மிகுந்த கஷ்டத்தில் உள்ளார் என்றால் இல்லை. தற்போது எதிர்மனுதாரருக்கு இரண்டாம் திருமணத்தின் மூலம் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தற்போது எதிர்மனுதாரருக்கு இரண்டாம் திருமணத்தின் மூலம் இரண்டு பெண் குழந்தைகளையும் இரண்டாவது மனைவியையும், தாயாரையும் பராமரித்து வருகிறார் என்றால் ஆமாம்.

11) எதிர்மனுதாரர் விதவை தாயாரையும் பராமரித்து வருகிறார் என்றால் ஆமாம். தற்போது வரை ரூ.6000 பெற்று வருகிறேன் என்றால் இல்லை. கடந்த 4 மாதமாக தான் பணம் தருவதில்லை என்றால் அவ்வாறு இல்லை. எதிர்மனுதாரர் அவர் தனிப்பட்ட பராமரிப்பு செலவு, இரண்டாம் திருமணத்தின் மூலம் இரண்டு பெண் குழந்தைகளையும் இரண்டாவது மனைவியையும், தாயாரையும் பராமரித்து

வருவதால் கஷ்டப்பட்டு வருகிறார் என்றால் இல்லை. எதிர்மனுதாரரிடம் இருந்து பெறும் தொகையை 2ம் மனுதாரருக்கு நான் சரியாக பயன்படுத்துவதில்லை என்றால் அவ்வாறு இல்லை.

12) நான் வங்கி கணக்கு வைத்துள்ளேன் என்றால் ஆமாம். மேச்சேரி கிளை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். அந்த வரவு செலவு கணக்கை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் MC 8/2018 தீர்ப்பு படி ரூ.4,32,000/- கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த தொகையை 2ம் மனுதாரருக்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்ற விவரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2ம் மனுதாரர் பெயரில் நிரந்தரமாக வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

13) தற்போது என் மாத சம்பளம் ரூ.80,000/- மேற்படி வீட்டு வாடகை வருமானம் ரூ.25000/-, 2ம் மனுதாரருக்கு மாதம் பெறப்படும் ரூ.6,000/- சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,11,000/- மாத வருமானம் வருகிறது என்றால் இல்லை. எனக்கு மாத வருமானம் ரூ.1,11,000/- மேல் வருகிறது என்றும் தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14) எதிர்மனுதாரருக்கு நிலையான வருமானம் இல்லாத நிலையிலும் 2ம் மனுதாரருக்கு மாதம் ரூ.6000 கொடுத்துவிட்டு தற்போது மகள் இரண்டு, வயதான தாயார் ஆகியோருக்கு தேவையான உணவு, உடை, மருத்துவ செலவு செய்து மிகவும் கஷ்டத்தில் உள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. எதிர்மனுதாரர் மேற்படி நபர்களை பராமரிக்கவே வருமானம் போதாததால் நண்பர்கள், உறவினர்களிடம் பணம் வாங்கி தான் குடும்பத்தை நடத்தி வருகிறார் என்றால் அவ்வாறு இல்லை.

15) நான் சொன்னவாறு மாதம் ரூ.50,000/- வருமானம் பெறுவதாக சொல்வது மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கல்வி கட்டணம், மருத்துவ செலவு, 2ம் மனுதாரருக்கு அதிகமாக இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மருத்துவம் குறித்து எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. அதனால் தான் 2ம் மனுதாரரின் கல்வி கட்டணம்

எவ்வளவு என்றும் அதிகரித்துள்ள கல்வி கட்டணத்தை நிரூபிக்க எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதன்மை வழக்கில் கொடுக்கப்பட்ட தொகை போதுமானது என்றும் தற்போது உயர்த்தி கேட்பது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு என்னென்ன செலவுகள் உள்ளது குறித்து என் மனுவில் சொல்லவில்லை என்றால் எனது தனிப்பட்ட செலவு மற்றும் கடன் தொகை திரும்ப செலுத்துவது, வாடகை செலுத்துவது உட்பட, என் தாயாரை பராமரிப்பது உட்பட அனைத்து செலவுகளையும் செய்து வருகிறேன்.

16) நான் எவ்வளவு கடன் வாங்கி அதை எவ்வாறு செலுத்தி வருகிறேன் என்று என் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கடன் திரும்ப செலுத்துவது குறித்து ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அம்மாவை பராமரிப்பது குறித்து மனுவில் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றும் என் அம்மாவிற்கு செலவு செய்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு மாதம் ரூ.10,000/- பென்ஷன் வருகிறது என்றும் விவசாய வருமானம், வாடகை வருகிறது என்றும் அவர் தான் 2ம் மனுதாரரை பராமரித்து வருகிறார் என்றால் அவ்வாறு இல்லை.

17) நான் இரண்டாவது திருமணம் செய்து கொண்டேனா என்றால் இல்லை. நான் மறைமலை நகரை சேர்ந்த ஓட்டல் உரிமையாளர் பிரதீப் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன் என்றால் இல்லை. நான் 2ம் மனுதாரரை பராமரிப்பது இல்லை என்றும் தற்போது எதிர்மனுதாரரை பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்தில் தற்போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**